www.freetnbooks.com

V12His

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி

வரலாறு

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்

2. கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினை எழுதவும்.

20 x 1 = 20

1."இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" (Poverty and Un-British Rule in India) என்ற நூலை எழுதியவர்.

(அ) பால கங்காதர திலகர் (ஆ) கோபாலகிருஷ்ண கோகலே

(இ) தாதாபாய் நௌரோஜி (ஈ) எம் ஜி ரானடே

2.கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்.

(அ) புலின் பிஹாரி தாஸ் (ஆ) ராமச்சந்திர கானுங்கோ

(இ) ஜதிந்திரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்

(ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி

3.அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?

(அ) பி. பி. வாடியா (ஆ) ஜவஹர்லால் நேரு

(இ) லாலா லஜபதிராய் (ஈ) சி.ஆர். தாஸ்

4.இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?

(அ) டிசம்பர் 31, 1929 (ஆ) மார்ச் 12, 1930

(இ) ஜனவரி 26, 1930 (ஈ) ஜனவரி 26, 1931

5.கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு ____

(அ) 1855 (ஆ) 1866 (இ) 1877 (ஈ) 1888

6.முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியதுஎது?

(அ) உருது (ஆ)இந்தி

(இ) மராத்தி (ஈ) பாரசீகம்

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?

(அ) உஷா மேத்தா (ஆ) பிரீத்தி வதேதார்

(இ) ஆசப் அலி (ஈ) கேப்டன் லட்சுமி

8. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்க

(i) சீன மக்கள் குடியரசு (ii) சீனாவுடனான இந்தியப் போர்

(iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம் (iv) பஞ்சசீலக் கொள்கை

(v) நேரு-லியாகத் அலி கான் ஒப்பந்தம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.

(அ) i, ii, iii, iv, v (ஆ) ii, i, v, iv, ii

(இ) iii, iv, i, v, ii (ஈ) i, iii, iv, v, i

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது எந்த ஆண்டு ?

(அ) 2005 (ஆ) 2006 (இ) 2007 (ஈ) 2008

10. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

(அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ

(இ)ரோஜர்பேக்கன (ஈ)லாண்ட்ஸ்டெய்னர்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com


11. கூற்று: கலிலியோ கலிலி தேவாலய விரோத போக்குக்காக கிறித்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
**காரணம்:** சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர்நிகஸின் சூரியமையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

12. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.
(அ) வெர்செய்ல்ஸ் (ஆ) தௌலன்
(இ) மார்செய்ல்ஸ். (ஈ) டியூலெரிஸ்

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | |
|---|---|---|
| (அ) மைக்கேல் பாரடே | - | 1) ஆர்க்ரைட் |
| (ஆ) எலியாஸ் ஹோவே | - | 2) ராபர்ட். புல்டன் |
| (இ) நீர்ச் சட்டகம். | - | 3) மின்சாரம் |
| (ஈ) நீராவிப் படகு | - | 4) தையல் இயந்திரம |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (அ) | 1 | 3 | 4 | 2 |
| (ஆ) | 1 | 4 | 2 | 3 |
| (இ) | 3 | 4 | 1 | 2 |
| (ஈ) | 3 | 4 | 2 | 1 |

14. நெப்போலியன் போனபார்ட்டின் மருமகனான லூயி நெப்போலியன் சூடிக் கொண்ட பட்டம்----------- என்பதாகும்.
(அ)இரண்டாம் நெப்போலியன் (ஆ) மூன்றாம் நெப்போலியன்
(இ) ஆர்லியன்ஸின் கோமகன் (ஈ) நான்காம் நெப்போலியன்

15. **கூற்று** : J.G. ஃபிக்ட் ஜெர்மானியர்களிடையே தேசியவாதத்தை ஊட்டினார்.
**காரணம்:** ஃபிக்ட் இளம் இத்தாலி இயக்கத்தை சேர்ந்தவர் ஆவார்.
(அ) **கூற்றும் காரணமும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) **கூற்று சரி. காரணம் தவறு.**
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

16. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.
(அ) விடுதலை ஆணை ---- இரண்டாம் அலெக்ஸாண்டர்
(ஆ) இரத்த ஞாயிறு --- இரண்டாம் நிக்கோலஸ்
(இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் ---- முதலாம் நிக்கோலஸ்
(ஈ) பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க் உடன்படிக்கை ------ மூன்றாம் அலெக்ஸாண்டர்

17. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர்
(அ) யாமமோடோ (ஆ) ஸ்கூஸ்னிக்
(இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் (ஈ) ஹிரோஹிடோ

18. **கூற்று** : பிலிப்பைன்ஸ் **4 ஜூலை 1946**ஆம் ஆண்டு விடுதலையடைந்தது.
**காரணம்:** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழான தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்தது.
(அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

19. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்
(அ) பெர்னாட் பரூச் (ஆ) ஜார்ஜ் ஆர்வெல்
(இ) ஜார்ஜ் கென்னன் (ஈ) சர்ச்சில்

20. சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின் (**டிசம்பர், 8 ,1991**) ரஷ்ய குடியரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ________ ஆவார்.
(அ) கோர்பச்சாவ் (ஆ) விளாடிமிர் புட்டின்
(இ) டிமிட்ரி மித்வதேவ் (ஈ) போரிஸ் எல்ட்சின்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

## பகுதி - II

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் **வினா எண் : 30 க்கு** கட்டாயம் விடையளிக்கவும். **7 X 2 = 14**

21. அவரிக் கலகம் குறித்து குறிப்பு வரைக.
22. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?
23. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
24. ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல்துறை நடவடிக்கையினை எது நியாயப்படுத்தியது?
25. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?
26. வோர்ம்ஸ் சபையின் வெளிப்பாடு என்ன என்று தெரிவிக்கவும்.
27. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததேன்?
28. ரோம் - பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?
29. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
30. லியானார்டோ டாவின்சி.

## பகுதி III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் **வினா எண் : 40 க்கு** கட்டாயமாக விடையளிக்கவும். **7 x 3 = 21**

31. 1906 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவிர் அறிவது யாது?
32. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிளாஃபத் இயக்கத்தின் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?
33. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்குச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பு குறித்து எழுதுக.
34. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.
35. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
36. 1783இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கிய சரத்துகளை விவாதிக்கவும்.
37. தனது தொழிற்சாலையில் பணியில் இருந்த ஊழியர்களின்முன்னேற்றத்திற்கு இராபர்ட் ஓவன் மேற்கொண்ட முன்னோடி தன்மையிலான நடவடிக்கைகளை மதிப்பிடுக.
38. இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
39. ஐநா சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.
40. மெகல்லனின் கடல்வழிப் பயணம்.

## பகுதி- IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7 x 5 = 35**

41.(அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள் எந்த அளவிற்கு காரணமாக இருந்தன?

**( அல்லது )**

(ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

42.(அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

**(அல்லது)**

(ஆ) ஆங்கிலேயரின் பிரித்தாலும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?


Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



43.(அ) சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய ராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

(அல்லது)

(ஆ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

44 (அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

(அல்லது)

(ஆ) முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.

45 (அ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

(அல்லது)

(ஆ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டு காட்டவும்.

46. (அ) 1920 முதல் 1940 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக

(அல்லது)

(ஆ) முதல் உலகப்போரின் போது நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைக.

47 (அ) இந்திய தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய கீழ்க்கண்ட இடங்களை **இந்திய வரைபடத்தில்** குறிக்கவும்.

1. அமிர்தசரஸ் 2. மீரட் 3.கான்பூர் 4.தண்டி 5. வேதாரண்யம்

(அல்லது)

(ஆ) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.

1.இங்கிலாந்து 2. பிரான்ஸ் 3 .ஜெர்மனி 4. அமெரிக்க ஐக்கிய நாடுகள் 5. ஜப்பான்

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner